**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்**
**தலைவர்**

**R.சந்திரசேகரன்.**
**பொதுச்செயலாளர்**

**சுற்றறிக்கை – 14** 24-09-2016

# *போனஸ் - 2015-16*

அன்புடையீர்

வணக்கம். 2015-16-ம் ஆண்டிற்கான போனஸ் குறித்து முடிவெடுத்திட, தமிழக அரசு உடனடியாக விவரங்கள் கேட்டுள்ளதாகவும், விவரங்களை அனுப்பிவைக்குமுன் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை கேட்டறிவது வாடிக்கையானது என்பதால், மின்வாரியத்தலைவர் உடனடியாக சங்கங்களின் கோரிக்கைகளை கேட்டுப் பெறுமாறு வாரிய அலுவலர்களைப் பணித்துள்ளார்.

அதன் பேரில், 23-09-2016 மாலை 5.00 மணிக்கு பேச்சு வார்த்தைக்கு வருமாறு அனைத்து சங்கங்களின் பொதுச்செயலாளர்களுக்கும், மதியம் 3.30மணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

பேச்சுவார்த்தைக்குச் செல்வதற்கு முன், சங்கத்தலைவரிடம் கைபேசி மூலமாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

நமது சங்கத்தின் சார்பில் கீழ்காணும் கோரிக்கைகள் வைக்கப்பட்டன.

1. போனஸ் சட்டவரையறைக்குள் வரும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும், தற்காலிக தினக்கூலிகள், ஒப்பந்தத்தொழிலாளர்கள் உட்பட (சம்பள வரம்பின்றி) போனஸ் 8.33%, கருணைத்தொகை 16.67%, ஆக மொத்தம் 25% வழங்கிட வேண்டும்.
2. போனஸ் கணக்கிட திருத்தப்பட்ட சட்டப்படி, மாத சம்பளம் ரூ.7000/−என எடுத்துக்கொள்ள வேண்டும்.
3. சென்ற போனஸ் ஆண்டு 2014-15 நிலுவைத்தொகை ரூ.8400/− இந்த ஆண்டு போனஸோடு சேர்த்து வழங்கிட வேண்டும்.
4. அனைத்து அலுவலர்களுக்கும் கருணைத் தொகை 16.67% வழங்கிட வேண்டும்.

அனைத்து சங்கங்களின் கோரிக்கைகளையும் கேட்டுக்கொண்ட வாரிய நிர்வாகம், இது குறித்து இன்றே (23.9.2016) அரசுக்கு அறிவிப்பு அனுப்புவதாகவும், விரைவில் போனஸ் குறித்து அரசு முடிவெடுக்கும் என்று தெரிவித்தது.

பேச்சு வார்த்தை மாலை 6.00 மணிக்கு முடிந்தது.

பெறுகின்ற போனஸில் ஒவ்வொரு உறுப்பினரிடம் ரூ.500/− நன்கொடை பெற்று, கிளைக்கு ரூ.100/−வைத்துக்கொண்டு, வட்டத்திற்கு ரூ.100/−ம், மத்திய சங்கத்திற்கு ரூ.300/−ம் அனுப்பிவைத்திட வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்.

பெறுநர்.

மத்திய அலுவலகக் கிளைச் செயலாளர்கள்,
கோட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள்,
வட்டத் தலைவர்கள், மண்டலச் செயலாளர்கள் மற்றும்
மத்தியசங்கப் பொறுப்பாளர்கள்.

நகல். செய்திமடல்.

